திரு. வா. மை அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருப்பூர் நகர சபை செலக்ஷன் கிரேடு முனிசிபாலிடியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு அதிகமாக மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கே சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதினால், கொசுத் தொல்லைகள் போன்றவை மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த வடிகால் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது அதற்கான பரிசீலனைகள் நடைபெற்றால்தான் அவை ஒழுங்காக நடைபெறும். இது பரிசீலனையில் இருக்கிறது. நோயாளிக்கு டாக்டர் நாடியை ஆராய்வதற்கு முன்பு மருந்து கொடுக்கக் கூடாது. பரிசீலனை செய்யவேண்டும். அதற்கு ஏறத்தாழ 8, 9 மாத காலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்கள் தேடப்படும். நிதி ஆதாரங்கள் கிடைத்தவுடனே அந்தத் திட்டம் செயல் முறைக்கு வரும்.

Regional Public Relations Offices

* 133 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether a number of Public Relations Offices have been opened recently at various centres in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) புதிதாக நான்கு மண்டல மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அண்மையில் இம்மாநிலத்தில் துவக்கப் பட்டுள்ளன.

(இ) (1) கன்னியாகுமரி,
(2) இராமநாதபுரம்,
(3) செங்கல்பட்டு, மற்றும்
(4) தர்மபுரி மாவட்டங்கள்

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்கீம்களையும் பப்ளிஸிடி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழ்நாடு சம்பந்தப்பட்ட அளவுக்குத்தான் செய்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Backward Classes whether the Public Relations Officer is also the Information and Publicity Officer and also what is the nature of work expected of him?

1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அவர்களுடைய பணி, அரசாங்கத்தினுடைய முன்னேற்றப் பணிகளையும், திட்டங்களையும் மக்களிடையே படக்காட்சிகள், பொதுக் கூட்டங்கள், நாடகங்கள் மற்றும் பொருள் காட்சிகள் ஆகியவற்றின் மூலமாக விளம்பரப்படுத்துவதாகும்.

திரு. அண்டி என்ற குருசாமி: இந்த மண்டல மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஏற்படுத்தியது, முக்கியமாக அரசாங்கத்தின் தேர்தல் பிரசார நேரங்களில் முழுக்க முழுக்கப் பயன்படுகிறது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதற்குச் சிறிது கூட ஆதாரம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இவைகளுக்கு அலுவலர்களை நியமிக்கும்பொழுது எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? இது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ச் மூலமாக நடைபெறுகிறதா, நேரடியாக நடைபெறுகிறதா அல்லது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நேரடியாகவும், இலாக்காக்களிலிருந்தும் சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. கே. கந்தசாமி: மக்கள் தொடர்பு அதிகாரிகள் மாவட்ட ரீதியாக அரசினுடைய சாதனைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் எடுத்து உரைக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். சில அரசாங்க அலுவலகங்களில் குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை அவர்களே நேரில் காணக் கூடும். அவர்கள் அப்படிக் காண்கின்றபொழுது, அரசியல்வாதிகள் அதைப் பற்றி மேடையில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் அவர்கள் அமைச்சர்களுக்கோ அல்லது அரசுக்கோ நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவிக்கவேண்டும் என்ற குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால், அம்மாதிரி குறிப்புகள் அனுப்ப அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை நினைவில் கொண்டு ஆவன செய்யப்படும்.

ஆசியா '72 கண்காட்சியில் தமிழக அரங்கு

*134 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆசியா '72 கண்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழக அரங்குக்கு அலங்காரம் செய்ய வந்தவாசி பாய் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து எவ்வளவு ரூபாய்க்குப் பாய்கள் வாங்கப்பட்டன?

(இ) அந்த மொத்தத் தொகையும் வந்தவாசி பாய் கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டு விட்டதா?